Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சங்கர் | Occupation | ஆசிரியர் |
| Father's name | ராமகிருஷ்ணன் | Calling | |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.

17.02.2026

1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மம்சாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 2013 ம் வருடம் ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் எங்கள் ஊரை சேர்ந்த முனியாண்டி மகன் முத்துராசு என்பவர் எனது வீட்டிற்கு வந்து வெள்ளை கலர் ஆப்பிள் கம்ப்யூட்டர் மற்றும் வெள்ளை கலர் ஆப்பிள் Keyboard தலா 1, ஆகமொத்தம் 2 செட்டுகளையும் கருப்பு கலர் டெல் கம்ப்யூட்டர், Dell CPU, V guard UPS, Dell Keyboard தலா மூன்று ஆகமொத்தம் 3 செட்டுகளையும் வெள்ளைகலர் Canon Fax Machine–1. Hp Gray and White Color Printer –1, ஆகியவற்றை என்னிடம் காட்டி அதற்கு கடனாக பணம்

ரூபாய் 30000 வேண்டும் என்று கேட்டதாகவும் நானும் மேற்படி பொருட்களை வாங்கி கொண்டு கைமாறாக 30000 பணம் கொடுத்ததாகவும் அதன் பின் மேற்படி பொருட்களை காளிமுத்து தனது கூட்டாளிகளான முனீஸ்வரன், முத்துக்குமார் என்ற அஜித்குமார், குருசாமி ஆகியோருடன் சேர்ந்து திருடி எடுத்து வந்துள்ளார் என்பதையும் அவர்கள் மீது வன்னியம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.114/2013 வழக்கு பதிவு செய்திருப்பதையும் தெரிந்து கொண்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.267/2015

**Depositions of PW- 8**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சக்திவேல்ராஜா | Occupation | மில் ஊழியர் |
| Father's name | நாராயணராஜா | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.

17.02.2026

1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2013 அன்று நான் வேலை செய்யும் நிறுவனமான வெங்கடாசலபதி ஸ்பின்னிங் மில்ஸ் அருகேயுள்ள ஸ்ரீராம் மெடிடெக்ஸ் நிறுவனத்தில் திருட்டு சம்பவம் நடந்ததாக அன்று காலை தெரிந்து கொண்டேன். அதன் பின்புகாவல் ஆய்வாளர் அங்கு வந்து வரைபடம் வரைந்து என்னிடமும் என்னுடன் பணிபுரிந்து வந்த வேல்முருகன் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அசா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி மெடிடெக்ஸின் உரிமையாளர் விஜயராகவராஜா ஆவார். அவர் எனது உறவினர் என்றால் இல்லை. நான் பணிபுரியும் வெங்கடாசலபதி ஸ்பின்னிங் மில்ஸின் உரிமையாளர் மேற்படி விஜயராகவராஜாவும் உறவினர் என்றால் சரிதான். மேற்படி நான்

கையெழுத்து செய்த ஆவணத்தை யார் எழுதினார்கள் என்பதுப ற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும் வேல்முருகனும் மேற்படி கையெழுத்தை வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து தான் போட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் நிறுவனமானது எனது முதலாளியின் உறவினரின் நிறுவனம் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.